# அறுவடையாகும் சூரியகாந்தியின் விலை நிலையாக இருக்கும்

சூரியகாந்தி எண்ணெய் உலகம் முழுவதும் உள்ள நுகர்வோர் மத்தியில் ஆரோக்கிய நலன்கள் காரணமாக அதிகம் விரும்பப்படுகிறது. சூரியகாந்தி எண்ணெய் தரமான எண்ணெய் வகையில் அதிகளவில் விற்பனையாகிறது. இதன் பரவலான ஒத்துப்போகும் தன்மை, அதிக உற்பத்தி திறன், குறுகிய காலம், மற்றும் இலாபகரத்தன்மை காரணமாக விவசாயிகளால் அதிகளவில் தேர்வு செய்யப்படுகிறது.

சூரியகாந்தி, 2014-15ஆம் ஆண்டில் 3.24 இலட்சம் எக்டர் பரப்பில், பயிரிடப்பட்டு 4.15 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவை, 2013-14ஆம் ஆண்டை ஒப்பிடும் போது 53 சதவீத பரப்பிலும், 24 சதவீதம் உற்பத்தியில் குறைந்துள்ளது. கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா, தமிழ்நாடு மற்றும் ஹரியானா ஆகியவை சூரியகாந்தி பயிரிடும் முக்கிய மாநிலங்களாகும். மும்பை, சென்னை மற்றும் ஹைதராபாத் ஆகியவை சூரியகாந்தி எண்ணெயின் முக்கிய வர்த்தக மையங்களாகும்.

தமிழ்நாட்டில், கரூர், தூத்துக்குடி, திருச்சி, திண்டுக்கல், விருதுநகர் மற்றும் அரியலூர் மாவட்டங்கள் மொத்த சூரியகாந்தி சாகுபடி பரப்பில் 81 சதவீதமும் உற்பத்தியில் 79 சதவீதமும் பங்களிக்கின்றன. தமிழ்நாட்டில், 2014-15ல் சூரியகாந்தி 70,000 எக்டரில் பயிரிடப்பட்டு, 50,000 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ்நாட்டில், முக்கிய கலப்பினமான சன்பிரட் ரகம் பயிரிடப்படுகிறது. இவற்றின் அதிக எண்ணெய் சத்து காரணமாக அதிக விலை கிடைக்கிறது. தற்போது சூரியகாந்தி விதை வெள்ளகோவில் சந்தையில் கிலோவிற்கு ரூ.33 – 36 வரை உள்ளது.

விவசாயிகள் சூரியகாந்தி விதைப்பிற்கான முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், கடந்த 15 ஆண்டுகளாக வெள்ளகோவில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய சூரியகாந்தி விதையின் விலையை ஆராய்ந்தது. சந்தை மற்றும் பொருளியல் ஆய்வுகளின் அடிப்படையில், சூரியகாந்தி விதையின் பண்ணை விலை குவிண்டாலுக்கு ரூ.3400 - 3600 வரை இருக்கும் எனக்

கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள:**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர்-641 003

தொலைபேசி -0422-2431405


**தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:**


பேராசிரியர் மற்றும் தலைவர்

எண்ணெய் வித்துக்கள் துறை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர்-641 003

தொலைபேசி எண் - 0422-2450812